MINISTRY OF MANPOWER

# CONNECT with ACE

## குடிபெயர்ந்த ஊழியர்களுக்கான மாதாந்திர மின் செய்திமடல்

ஏஸ் கிராஞ்சி வட்டாரம் மற்றும் கொக்ரேன் ஆர்சி குழு வழங்கியப் புகைப்படங்கள்




**மார்ச் 2022**



### இந்தப் பதிப்பில்:


முக்கிய அறிவிப்புகள்

இணைய மிரட்டலில் இருந்து உங்களைப் பாதுகாத்திடுங்கள்!

S.E.A அக்வேரியம் எனும் நீர்வாழ் உயிரினக் காட்சியகம் மற்றும் கடல் பயணத்தின் சிறப்பம்சங்கள்

# முக்கிய அறிவிப்புகள்





## பாதுகாப்பு நிர்வாக நடைமுறைகள் தளர்வு

**(29 மார்ச் 2022 முதல்)**

- குழுவின் அளவு அதிகரிக்கப்படும். ஒரு குழுவில் 10 பேர் வரை இருக்கலாம்
- அனைத்து உட்புற அமைப்புகளிலும் தொடர்ந்து முகக் கவசம் அணிய வேண்டும். வெளிப்புற அமைப்புகளில் முகக் கவசம் அணிவது உங்கள் விருப்பமாகும்
- மதுபானக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் மதுபான உரிம நடைமுறை நிபந்தனைகளுக்கு உட்பட்டு, இரவு 10.30 மணிக்குப் பிறகு, பீர் தோட்டங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலை போன்ற உணவு பான விற்பனை நிலையங்களில் மதுபானம் விற்கப்படலாம்

**(ஏப்ரல் 1, 2022 முதல் - முழுமையாகத் தடுப்பூசி போட்டுக்கொண்ட ஊழியர்களுக்கு)**


- சமூக வருகை புரியுமுன் ஏஆர்டி பரிசோதனை செய்ய வேண்டிய அவசியமில்லை
- ஆர்சிகளுக்குச் செல்ல, எக்ஸிட் பாஸுக்கு விண்ணப்பிக்கத் தேவையில்லை

## எக்சஸ்குறியீடு மாற்றங்கள்

**17 மார்ச் 2022 முதல்**, பின்வரும் சூழ்நிலைகளில் உங்கள் எக்சஸ்குறியீடு சிவப்பு நிறமாக மாறும்:

- ஏஆர்டி அல்லது பிசிஆர் பரிசோதனையில் உங்களுக்குத் தொற்று உள்ளது என்று கண்டறியப்பட்டால்
- நீங்கள் தடுப்பூசி போட்டுக்கொள்ளாத அல்லது பகுதியளவு மட்டுமே தடுப்பூசி போட்டுக்கொண்ட ஊழியர் என்றால். கொவிட்-19 நோயிலிருந்து மீண்டு வந்து, தொற்று ஏற்பட்டு 180 நாள்கள்களைக் கடந்த ஊழியர்களும் இதில் அடங்குவர்

ஸ்பெஷல் பாஸ் எனப்படும் சிறப்பு அனுமதிச் சீட்டு வைத்திருப்பவர்கள், தடுப்பூசி போட்டுக்கொள்ளாத/பகுதியளவு மட்டுமே தடுப்பூசி போட்டுக்கொண்ட ஊழியர்கள், ஆர்சிகளுக்குச் செல்ல ஒரு படிவத்தைக் கைப்பட நிரப்ப வேண்டும். தடுப்பூசி போட்டுக்கொள்ளாத / பகுதியளவு மட்டுமே தடுப்பூசி போட்டுக்கொண்ட ஊழியர்கள் ஆர்சி வருகைக்கு முன் 24 மணிநேரத்திற்குள் செய்த ஏஆர்டி பரிசோதனையில் தொற்று பாதிப்பு இல்லை எனும் முடிவையும் காட்ட வேண்டும்.




## அட்டவணைப்படி செய்யப்படும் வழக்கமான பரிசோதனை நீக்கப்படும்

**29 மார்ச் 2022 முதல்**, அனைத்து ஊழியர்களுக்கும் அட்டவணைப்படி செய்யப்படும் வழக்கமான பரிசோதனை (RRT) தேவைப்படாது. தங்குவிடுதிகளில் வசிக்கும் தடுப்பூசி போட்டுக்கொள்ளாத/பகுதியளவு மட்டுமே தடுப்பூசி போட்டுக்கொண்ட ஊழியர்கள் இதில் அடங்குவர்.

# இணைய மிரட்டலை தடுத்து நிறுத்தவும்!








### இணைய மிரட்டல், அதாவது, சைபர்புலியிங் என்றால் என்ன?

இணைய மிரட்டல்களின் எடுத்துக்காட்டுகள்:

- இணையம் வழி அச்சுறுத்தல்கள் அல்லது மனதைப் புண்படுத்தும் செய்திகளைப் பெறுதல்
- இணையம் வழி போலியான வதந்திகளைப் பரப்புதல்
- இணையத்தில் சங்கடமான அல்லது தீங்கு விளைவிக்கும் படங்களைப் பதிவிடுதல்

### இணைய மிரட்டல் ஏன் மோசமானச் செயலாகும்?

- உங்கள் மன நலனை அது பாதிக்கலாம் (எ.கா. மன உறுதி இழத்தல், ஆர்வத்தை இழத்தல்)
- உங்கள் வேலை மற்றும் சமூக வாழ்க்கையைப் பாதித்தல்


### இணைய மிரட்டல்காரர்களைப் புறக்கணிக்கவும்

- இந்தக் கொடுமைக்காரர்கள் உங்கள் கவனத்தை ஈர்க்க முயற்சிக்கிறார்கள். நீங்கள் அவர்களுக்கு செவி சாய்த்தால், நிலைமை மோசமாகிவிடும். தம் செயல்கள் வெற்றி அடைந்ததாக அவர்கள் கருதுவார்கள்




### புகாரளிக்கவும்!

இணைய மிரட்டல்காரர் உங்களை சமூக ஊடகங்களில் மிரட்டினால், அவர்களின் கணக்கைப் புகாரளிப்பதன் மூலம் அவர்களைத் தடுத்து நிறுத்தவும். இதனால், அந்தக் கணக்கின் வழி அவர்கள் உங்களுக்கு எந்த செய்தியையும் அனுப்ப இயலாது



**(24-மணி நேர உதவி எண்)**
**ஹெல்த்சர்வ் (HealthServe): 3129 5000**
**குடிபெயர்ந்த ஊழியர் நிலையம் (MWC): 6536 2692**

**ஹியர்ஃபோர்யு (Hear4U): 6978 2725**
**திங்கள் - வெள்ளி: காலை 10 மணி முதல் - இரவு 5 மணி வரை**
**வார இறுதி நாள்கள் மற்றும் பொது விடுமுறை நாள்களில் மூடப்படும்**

### உதவி பெறவும்

- இணைய மிரட்டல்காரர்களால் நீங்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தால், யாருடனாவது அதைப் பற்றி சொல்லி உதவி பெறவும் அல்லது மேலே கொடுக்கப்பட்டுள்ள உதவி எண்களை அழைக்கவும்



**உங்களுக்கு உதவ நாங்கள் இங்கு இருக்கிறோம். இணைய மிரட்டல் பற்றிய கூடுதல் தகவலுக்கு, இந்த ஹெல்த்ஹப்(HealthHub) இணையதளத்தை நாடவும்**



## குடிபெயர்ந்த நமது ஊழியர்களுக்கு ஒரு செய்தி

திரு மூர்த்தியைச் சந்திப்போம். முன்னாள் கட்டுமானத் துறை ஊழியர் இவர். தற்போது சிங்கப்பூரில் 7 மளிகைக் கடைகளின் உரிமையாளர். அவர் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புவது இதோ:

நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதைப் பற்றி பெருமைப்பட வேண்டும்! எனினும், தற்போது உள்ள சௌகரியமான நிலையிலேயே மெத்தனமாக இருந்திட வேண்டாம். சிங்கப்பூர் வாய்ப்புகள் நிறைந்த நாடு. அதனால், தொடர்ந்து வாய்ப்புகளை நாடி உங்களை நீங்கள் மேம்படுத்திக் கொள்ள வேண்டும்!

*சிங்கப்பூரில் உங்கள் வாழ்க்கையைப் பற்றிய சுவாரஸ்யமான கதை ஒன்றைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறீர்களா? இந்த இணைப்பைக் கிளிக் செய்து அதனை எங்களுக்குத் தெரியப்படுத்தவும்*

# நிகழ்ச்சியின் சிறப்பம்சங்கள்



## சொகுசு கப்பல் பயணம்

அரசு சாரா அமைப்புகள் ஏற்பாடு செய்த சொகுசு கப்பல் பயணத்தில் 17 ஷா தங்குவிடுதியைச் சேர்ந்த ஊழியர்கள் கலந்து கொண்டனர். சிங்கப்பூர் ஆற்றில் பயணித்த அவர்களுக்கு சிங்கப்பூர் வான்வெளி கண்ணுக்கு விருந்தாக அமைந்தது. இந்த நிகழ்வில் பங்கேற்ற எங்கள் ஊழியர்களுக்கும் அதற்கு ஏற்பாடு செய்த அரசு சாரா அமைப்புகள், ராட்சன்ய ராணுவம், மற்றும் எஸ்ஜி விபத்து உதவி மையம் ஆகியவற்றுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறோம்.



## எஸ்.இ.ஏ. அக்வேர்யம் என்று அழைக்கப்படும் நீர்வாழ் உயிரினக் காட்சியகத்திற்குப் பயணம்

மார்ச் மாத கடைசி 2 வாரங்களில், கிராஞ்சி வட்டாரத்தைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட ஊழியர்கள் எஸ்.இ.ஏ. அக்வேர்யத்திற்கு உல்லாசப் பயணம் சென்றனர். அவர்கள் 100,000-க்கும் மேற்பட்ட நீர்வாழ் விலங்கினங்களைக் காணும் வாய்ப்பைப் பெற்றனர். நீர்வாழ் உயிரினங்களைப் பற்றியும் மேலும் அறிந்து கொண்டனர்.

ஊழியர்களுக்கு இந்நிகழ்வை ஏற்பாடு செய்த கிராஞ்சி வட்டாரத்தின் ஃபாஸ்ட் குழு அதிகாரிகளுக்கும், NGO, AGWO அமைப்புகளுக்கும் மிக்க நன்றி.



*ஏஸ் கிராஞ்சி வட்டாரம் வழங்கிய புகைப்படம்

## பொழுதுபோக்கு நிலையத்தில் நடவடிக்கைகள்

உல்லாசப் பயணங்கள் தவிர, பொழுதுபோக்கு நிலையங்களில் (ஆர்சி) நடவடிக்கைகளும் இடம்பெற்றன! மார்ச் 29 அன்று, கொக்ரேன் ஆர்சியில் விளையாட்டு விழா நடத்தப்பட்டது. விளையாட்டுகளில் ஊழியர்கள் கலந்துகொண்டு பரிசுகளை வென்றனர்.





நீங்கள் பங்கேற்கக்கூடிய பல்வேறு **நேரடி மற்றும் இணைய நடவடிக்கைகளைப்** பற்றி மேலும் அறிய இங்கே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்!

அண்மைய செய்திகள் மற்றும் தகவல்களைப் பெற எங்கள் அதிகாரப்பூர்வ ஒளிவழிகளில் எங்களைப் பின்தொடரவும்!

- மனிதவள அமைச்சின் ஃபேஸ்புக் பக்கம்
- மனிதவள அமைச்சின் யூடியூப் ஒளிவழி
- மனிதவள அமைச்சின் இணையத் தளம்